சோவியத் ஆக்கிரமிப்பை ஆட்சேபித்து இலங்கையில் கண்டனக் கூட்டம்

அமைச்சர்கள் கலந்து கொள்வர்

கொழும்பு, திங்கள் செக்கோஸ்லாவாக்கியாவில் சோவியத்தின் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளை ஆட்சேபித்து தேசிய அரசாங்கத்தில் பிரதிநிதித்துவம் வகிக்கும் சகல அரசியல் கட்சிகளும் கூட்டமொன்றை நடாத்தவிருக்கின்றன.

இம்மாதம் 29-ம் திகதி கொழும்பு தர்மபாலமாவத்தையிலுள்ள செஞ்சிலுவை மண்டபத்தில் இந்த ஆட்சேபக்கூட்டம் நடைபெறும் நியமன அங்கத்தவர் திரு. ரட்ணபால தலைமையில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் ராஜாங்க மந்திரி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனா, கைத்தொழில் மீன்பிடி மந்திரி திரு. பிலிப்குணவர்த்தனா, உள்ளூராட்சி மந்திரி செனட்டர் திரு. திருச்செல்வம் உட்பட அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த எம். பி. க்கள் சிலரும் கலந்து கொள்வர்.

ரோம், ஆக. 26

பாப்பரசர் சின்னப்பர் இன்று ரோமாபுரி வந்து சேர்ந்தார். லத்தீன் அமெரிக்காவில் தனது விஜயத்தை முடித்துக்கொண்டு இன்று இங்கு வந்து சேர்ந்தார்.

Registered as a Newspaper in Ceylon ★ ☆ விலை சதம் 10

ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண்; 49
போன் 339
National Tamil Daily
மலர் 10
இதழ் 198
தேசிய தினசரி

[illegible] கீலக ஆவணி 11 ஜு. ஆகி 2 செவ்வாய்க்கிழமை (27-8-6)

செக். தலைமைபதவிகள் மாற்றப்படமாட்டாது

2 மாதங்கள் வரை ரஷ்ய துருப்புகள் இருக்கும்

4 நாள் பேச்சுவார்த்தை முடிவு

மாஸ்கோ, ஆகஸ்ட் 26

மாஸ்கோவில் ரஷ்யத்தலைவர்களுக்கும் செக்கோஸ்லாவாக்கிய ஜனாதிபதி ஸ்வபோடா, செக். நாட்டு கம்யூனிஸ்ட் கட்சித்தலைவர் திரு. டூப்செக், செக். நாட்டு பிரதமர் திரு. செர்னிக் ஆகியோருக்குமிடையே நான்கு நாட்களாகத் தொடர்ந்து நடைபெற்று வந்த பேச்சுவார்த்தை இன்று முடிவுற்றதாக அறிவிக்கப்பட்டது.

தொடர்ந்துபதவிகளைவகிப்பர்

செக்-சோவியத்தலைவர்களுக்கிடையே இன்று இறுதியாகச் செய்துகொள்ளப்பட்ட உடன்பாட்டின்படி செக்கோஸ்லாவாக்கியாவில் இப்போது பிரதம பதவிகளை வகித்துவருபவர்கள் தொடர்ந்தும் அப்பதவிகளை வகித்துவருவார்களென்றும் சோவியத்யூனியனின் படைகள் இருமாதங்கள்வரை செக்கோஸ்லவாக்கியாவில் முகாமிட்டிருக்குமெனவும் தெரிவிக்கப்பட்டது.

துருப்புக்கள் விலகுகின்றன

ருமேனியாவிலிருந்து கிடைத்த செய்தியொன்று வார்ஸோ ராணுவஒப்பந்த நாடுகளின் துருப்புக்கள் இப்போது செக் நாட்டைவிட்டு விலகத் தொடங்கியுள்ளதாகத் தெரிவித்தது. செக்கோஸ்லாவாக்கியாவில் நிலைகொண்டுள்ள சோவித் துருப்புக்களையும் வார்ஸோ ராணுவ ஒப்பந்த நாட்டுத் துருப்புக்களையும் செக் மக்கள் பகைவர்களாகவும் விரோதிகளாகவுமே கருதி நடத்துகிறார்களென்று இன்று செக் நாட்டு வானொலி ஒன்று அறிவித்தது.

15க்குமேற்பட்டோர் கொலை

பிராக், ஆக. 26

இதற்கிடையே பிராக்கிலிருந்து வரும் செய்தி இங்கு ரஷ்யத் துருப்பினரால் 15க்கு மேற்பட்டவர் கொல்லப்பட்டதாகவும் 250க்கு மேற்பட்டவர் படுகாயமுற்றதாகவும் தெரிவித்துள்ளது. செக். மக்கள் வீரத்துடனும் மனோ தைரியத்துடனும் ஆக்கிரமிப்பை எதிர்த்துப் போராடிக்கொண்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது.

நகரவீதிகளில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் செய்த ஒரு யுவதியும் சுடப்பட்டு மாண்டார்.

செக். நாட்டு அரசியல் தலைவர்களில் 100பேர் இப்போது கைதுசெய்யப்பட்டு சிறைவைக்கப்பட்டுள்ளார்களென்றும் எங்கே இவர்கள் சிறைவைக்கப்பட்டுள்ளார்கள் என்பது தெரியவில்லையெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுச் செயலாளர் பதவி கிழக்கிலங்கைக்கு

சுகாதார சேவைத் தொழிலாளர் சங்கம் ஆலோசனை

யாழ்ப்பாணம், செவ்.

இம்மாதம் 30-ம் திகதி நடைபெறவிருக்கும் அரசாங்க சுகாதார சேவைத் தொழிலாளர் சங்கத்தின் வருடாந்தக் கூட்டத்தில் தலைவர் பதவியை வடபகுதிக்கும், பொதுச் செயலாளர் பதவியை கிழக்குமாகாண ஊழியர் ஒருவருக்கும் வழங்குவதற்கான தீவிரமான நடவடிக்கைகள் இப்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

யாழ். நகர மண்டபத்தில் நடைபெறவிருக்கும் இக்கூட்டத்தில் உபசபாநாயகர் திரு. மு. சிவசிதம்பரம், திரு. ஜி. ஜி. பொன்னம்பலம் எம். பி., திரு. கா. சிவசிதம்பரம் எம். பி. ஆகியோர் கலந்துகொள்ளவிருக்கின்றார்கள். கடந்த 25 வருடங்களுக்கு மேலாக சங்கத் தலைவராக இருந்து அண்மையில் ஒய்வுபெற்ற திரு எஸ். ஆர். அருமைநாயகத்தை இக்கூட்டத்தில் பாராட்டிக் கௌரவிக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தொழிலாளர் வேதனம், வேலைநேரம், குடியிருப்பு வசதி ஆகியனவற்றின் நலன்கருதி மொத்தம் 1[illegible] [illegible]ங்கள் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்படவிருக்கின்றன. (கா. தி.)

அலங்காரத் திருவிழா

யாழ்ப்பாணம், செவ்.

நல்லூர்கிழக்குமூர்த்திநாயகர் ஆலயத்தில் இன்று சதுர்த்தியை முன்னிட்டு விசேஷ அலங்காரத் திரு[illegible] பண்டிதர் இரா. சிவசுப்பிரமணியத்தின் ஞானப் பிரசங்கம் இடம்பெறும்.

'தி. மு. க. விடம் நிலையான பொருளாதாரகொள்கையில்லை'

காங்கிரஸ் அங்கத்தவர் குற்றச்சாட்டு

சென்னை, ஆகஸ்ட் 26

தி. மு. க. ஆட்சியாளரிடம் நிலையான பொருளாதாரக் கொள்கையில்லையென்றும், அதனாலேயே வேலையில்லாத் திண்டாட்டம் போன்ற பல பிரச்னைகள் தலைவிரித்துத் தாண்டவமாடுகின்றதென்றும் ராஜ்ய கீழ்சட்டசபையில் காங்கிரஸ் அங்கத்தவர் திரு. பொன்னப்பா நாடார் கூறினார்.

திராவிட முன்னேற்றக் கழக ஆட்சிமீது கொண்டு வரப்பட்ட நம்பிக்கையில்லாத் தீர்மானத்தின்மீது இன்று 3-ம் நாளாக விவாதம் நடைபெற்றது.

தி. மு. க. அங்கத்தவர் திரு. எம். கணேசன் பேசுகையில், ஒருபோக விளைச்சலை இருபோகவிளைச்சலாக்க தி. மு. க. நடவடிக்கை எடுத்துவருகிறதென்றும், வேலையில்லாத் திண்டாட்டம் தி. மு. க. ஆட்சிக்கு வந்ததற்கப்புறம் பெருமளவு குறைந்துள்ளதென்றும் குறிப்பிட்டார்.

செக். நிலைமை பற்றி இலங்கை கம். கட்சி அறிக்கை

கொழும்பு, திங்கள்

ஏகாதிபத்தியவாதிகளுடன்சேர்ந்து கொண்டு[illegible] மாற்றுவதாக செக்கோஸ்லவாக்கிய எதிர் புரட்சிவாதிகளை இலங்கை கம்யூனிஸ்ட்கட்சி [மாஸ்கோ] கண்டித்த அறிக்கை ஒன்றை விடுத்துள்ளது.

'செக்கோஸ்லாவேக்கியாவில் நடைபெற்றுள்ள துக்ககரமான சம்பவங்களையிட்டு இலங்கையிலும் வெளிநாட்டிலுமுள்ள முற்போக்கு சோஷலிச சக்திகளைப் போலவே இலங்கை கம்யூனிஸ்ட் கட்சியும் கவலை கொண்டுள்ளது. செக்கோஸ்லாவேக்கிய கம்யூனிஸ்ட் கட்சி தனது கடந்தகால தவறுகளைத் திருத்திக்கொள்வதற்கு எடுத்துக்கொண்ட முயற்சிகளை எமது கட்சி மிக உன்னிப்பாகவும் அனுதாபத்தோடும் அவதானித்துவந்தது.

ஆனால் அதேசமயம் செக்கோஸ்லாவேக்கியாவுக்குள் ஏற்பட்டுள்ள அரசியல் சூழ்நிலைகளை அந்நாட்டிலுள்ள வலதுசாரி, பிற்போக்கு சக்திகள் மேற்கு ஜெர்மனிபோன்ற வெளியிலுள்ள திரிபுவாதிகளின் உதவியுடன் எதிர் புரட்சி நடவடிக்கைகளுக்கு பயன்படுத்திவந்த முறைகளைக் கண்டு எமதுகட்சி அதிர்ச்சியடைந்துள்ளது. சோஷலிஸத்தை ஒழித்துவிட்டு பழைய அரசியல் முறையை நிலைநாட்டுவதுதான் எதிர்புரட்சியாளரின் நோக்கம்'' என்று இலங்கைகம்யூனிஸ்ட் கட்சி தெரிவித்துள்ளது.

எதிர் புரட்சியாளர்கள் ஏகாதிபத்திய சக்திகளிடமிருந்து அரசியல், பொருளாதார மற்றும் தார்மீக உதவிகளைப் பெற்றார்களென்றும் கம்யூனிஸ்ட் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

டுப்செக் மீண்டும் சந்தேகம்

மாஸ்கோ, ஆக. 26

மாஸ்கோவில் செக்கோஸ்லவாக்கிய ஜனாதிபதி ஸ்வபோடாவுடன் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் டூப்செக்கும் இருக்கிறாரென்று ஏற்கனவே கிடைத்த செய்திகள் கூறியபோதிலும், அவர் இருப்பது பற்றி உத்தியோகபூர்வமாக ஊர்ஜிதம்செய்யப்படவில்லையென்று மாஸ்கோவிலிருந்து கிடைத்த ஏஜன்ஸி செய்தியொன்று கூறுகிறது.

மணிவாக்கு

ஒவ்வொரு மனிதனும் தனக்குள்தான் பதுங்கிக் கிடக்கும் 'தீண்டத்தகாத' புன்மையான குணங்களைக் கண்டுபிடித்து ஒழித்துவிட முயற்சி செய்தால் வெளி உலகில் எவருமே தீண்டத்தகாத மனிதராகத் தென்படமாட்டார்.

—ஞானி

ஈழநாடு
Ceylonese National Tamil Daily
Telegrams: EELANADU
Post Box 49 Jaffna
Telephone: 389.

இன்றைய தினம் செவ்வாய்க்கிழமை
ஆவணி மாதம் 11-ந் திகதி
(27-8-68)

உல்லாச பிரயாண விருத்தி

உணவு, உபஉணவு உற்பத்தியை அதிகரிப்பதில் திரு. டட்லி சேனநாயகாவை பிரதம மந்திரியாகக் கொண்ட தேசிய அரசாங்கம் ஓரளவு வெற்றி பெற்றிருக்கிறது என்பது உண்மையே. எவ்வித பாகுபாடுமின்றி நாட்டுமக்கள் அனைவரும் உணவில் தன்னிறைவு காண்பதற்காக உழைத்தால் பிரதமரும் மற்றும் அமைச்சர்களும் எதிர்பார்ப்பதுபோல் 1970-ம் ஆண்டுக்கு முன்னரே உணவில் தன்னிறைவை அடையமுடியுமென்பதற்கு இதுவரை காணப்பட்டுள்ள ஓரளவுவெற்றி சான்று.

உணவில் மட்டுமல்ல கைத்தொழில் கடற்றொழில் விருத்தியிலும் அரசாங்கம் அக்கறை செலுத்தத் தொடங்கியிருந்தாலும் உணவு உற்பத்திக்கு அடுத்தபடியாக உல்லாசப்பிரயாணிகளைக் கவர்ந்து இலங்கைக்கு வெளிநாட்டு வருமானத்தை அதிகரிக்க அரசாங்கம் அதிகவனம் செலுத்திவருவது பாராட்டத்தக்கது. உல்லாசப் பிரயாணிகளைக் கவருவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளத்தற்கு முன்னைய மக்கள் ஐக்கியமுன்னணி அரசாங்கமும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி அரசாங்கங்களும் திட்டங்கள் பல வகுத்தபோதிலும் அவைவெறும் திட்டங்களாக இருந்தனவேயன்றி செயல்படவில்லை; உல்லாசப் பிரயாணிகள் வருகை அதிகரிக்கவுமில்லை; அதன்மூலம் வருமானம் பெருகவுமில்லை.

உல்லாசப் பிரயாணம் அதிக வருமானத்தைத் தேடிக்கொடுக்கும்சிறந்த தொழில் துறையென்பதை வெளிநாடுகள் பலவும் நிரூபித்திருக்கின்றன. அயல்நாடான இந்தியா கூட இதில் வெற்றியீட்டியிருக்கிறது. இந்தியாவில் தமிழ்நாட்டிலுள்ள மாமல்லபுரத்தை உல்லாசப் பிரயாணிகளைக் கவரக் கூடிய இடமாக அபிவிருத்தி செய்வதற்கென மூன்று கோடி ரூபாய் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

நமது நாட்டைப் பொறுத்தவரையில் உல்லாசப் பிரயாணிகளைக் கவர்ந்திழுக்கக்கூடிய இயற்கை வனப்புகள் நிறைந்த இடங்கள் நிறைய இருப்பினும் வெளிநாட்டார் இங்கு வந்து தங்குவதற்கும் இடங்களைச் சுற்றிப் பார்ப்பதற்கும் 'ஹோட்டல்' வசதிகளோ, போக்குவரத்துவசதிகளோ மிக மிக்குறைவு. இவைதவிர உல்லாசப் பிரயாணி இடங்களைத் தெரிவுசெய்வதில்கூட அரசியல், வகுப்பு, இன அடிப்படையில் கவனம் செலுத்தப்படுவதும் இத்துறை அபிவிருத்தியடையாதிருப்பதற்கு ஒருகாரணம் என்று சொல்லலாம்.

வெந்நீரூற்று உள்ள கன்னியாய், பிரசித்தி பெற்ற கீரிமலை, மற்றும் அழகுவாய்ந்த நெடுந்தீவு, பழைய தமிழ் மன்னர்களின் ராஜதானியாகிய நல்லூர் ஆகியவைகளை விருத்திசெய்து உல்லாசப் பிரயாணிகளை இங்கும் வந்துபோகச் செய்வதற்கான வழிவகைகளைச் செய்வதற்கு புதிதாக அமைக்கப்பட்டுள்ள உல்லாசப் பிரயாண அபிவிருத்திச்சபை தனது திட்டத்தில் இவைகளையும் சேர்த்துக்கொள்ளவில்லையே ஏன்?

ம. பொ. சியை அழைக்க முடிவு

உரும்பராய், திங்கள் நவம்பர் மாதம் எட்டாம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெறவிருக்கும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சி வாலிப முன்னணி மகாநாட்டில் கலந்துகொள்வதற்கு தமிழகத்திலிருந்து திரு ம. பொ. சிவஞானத்தை வரவழைப்பதென தமிழ்க்காங்கிரஸ் கட்சியின் வாலிபமுன்னணிக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ம. பொ. சியை இங்கு வரவழைப்பதற்கான ஒழுங்குகளை கவனிப்பதில் உபசபாநாயகரும் உடுப்பிட்டி எம். பி. யுமான திரு. எம். சிவசிதம்பரம் ஈடுபட்டுள்ளார்.

பனங்காயிலிருந்து எண்ணெய்!

உரும்பராய், திங்கள் பனங்காயிலிருந்து எண்ணெய் உற்பத்தியாக்கலாம் என்று வனம்பொருள் ஆராய்ச்சியாளர் கண்டுபிடித்துள்ளனர். சீக்காய் பருவத்திலுள்ள இந்தப் பனங்காயிலிருந்து தயாரிக்கப்படும் எண்ணெய் உணவுப் பொருட்களுடன் சேர்த்துக்கொள்வதற்கும், மருந்துவகைகளுக்கும் உபயோகிக்கலாமாம். இதுசம்பந்தமான ஆராய்ச்சி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

கண் வைத்திய நிபுணர் திரும்பினார்

யாழ்ப்பாணம், செவ். ஆசிய கண் வைத்திய நிபுணர்களின் 3-வது ஆராய்ச்சி மகாநாட்டுக்குச் சென்றிருந்த இலங்கை கண் வைத்திய நிபுணரான டாக்டர் ஆர். பரராஜசேகரம் இலங்கை திரும்பியுள்ளார்.

சிங்கப்பூரில் நடைபெற்ற இம் மகாநாட்டில் மொத்தம் 170 கண் வைத்திய நிபுணர்கள் கலந்துகொண்டனர். இலங்கையிலிருந்து டாக்டர் பரராஜசேகரம் உட்பட மூவர் கலந்து கொண்டனர். டாக்டர் திரு. பரராஜசேகரம் இம் மகாநாட்டில் இலங்கையில் முக்கியமாக யாழ்ப்பாணத்தில் ''கண்நோய் அழுத்தம்'' பற்றிய ஆராய்ச்சிக் கட்டுரையொன்றை வாசித்திருந்தார். [கா. நி]

உரிமைகளைப் பெறுவதற்கு

'பிரிந்த சங்கங்கள் ஒன்று சேரவேண்டும்'

தபால்லிகிதர் மகாநாட்டில் யாழ். கிளை பிரதிநிதி

கொழும்பு, திங்கள் ''பிரிந்திருக்கும் சங்கங்கள் ஒன்று சேர்வதன்மூலம் தான் எச் சங்கங்களும் தமது உரிமைகளையும், சலுகைகளையும் எளிதில் பெற முடியும். தனிப்பட்ட காரணங்களினால் சங்கங்கள் பிரிந்திருப்பது சங்கத்தின் பலவீனத்தை எடுத்துக்காட்டுவதாகவே அமையும்''.

அரசாங்க தபால் லிகிதர் சங்கத்தின் 21-வது வருடாந்த மகாநாட்டில் யாழ்ப்பாணக்கிளையின் சார்பில் கலந்துகொண்ட திரு. சி. விநாயகமூர்த்தி மேற்கண்டவாறு கூறினார். கொழும்பு அரசாங்க சேவையர் விளையாட்டு மைதானத்தில், திரு. ஜயசேகராவின் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. சி. விநாயகமூர்த்தி மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது: காலப்போக்கில் எமது நாட்டில் வாழ்க்கைச் செலவுகள் கூடிக்கொண்டு போகிற நேரத்தில் அரசாங்க ஊழியர்களுக்குரிய சம்பளமும், உரிமைகளும், மிகவும் குறைவாகவே இருப்பதாகவும் புதிய நிர்வாகம் இக் குறைகளை நிறைவேற்றுமெனவும் அவர் தெரிவித்தார் [வி. நி]

சோலைவரி கட்டாதவர் சொத்து பறிமுதலாகும்

சுழிபுரம் கி. சபை நடவடிக்கை

சுழிபுரம், திங்கள் சுழிபுரம் கிராமசபையினருக்கு சேரவேண்டிய சோலைவரியை கட்டாதவர்களின் சொத்துக்களை பறிமுதல் செய்து ஏலத்தில் விற்பனை செய்வதென கிராமசபைத் தலைவர் திரு. சு. சுந்தரசுவாமி தலைமையில் நடைபெற்ற சாதாரணக்கூட்டத்தில் ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது. ஏழுவருடங்களாகப் பணம் கட்டாதவர்களின் பணத்தை அறவாக்குவதில் சபை கவனமெடுக்க வேண்டுமென்றும், மேலும் அவகாசம் கொடுப்பதில்லையெனவும் தீர்மானிக்கப்பட்டது.

தமிழ் தெரிந்த பொலிசார் மேலும் பலர் வருவர்

யாழ்ப்பாணம், செவ் வட பகுதிப் பொலிஸ் நிலையங்களுக்கு மேலும் தமிழ் தெரிந்த பொலிசார் பலர் அனுப்பப்படவிருக்கின்றனர். இதற்கான நடவடிக்கைகளை பொலிஸ் தலைமைக் காரியாலயம் மேற்கொண்டுள்ளதாகத் தெரிகின்றது.

இப்போது 35 விகிதம் மட்டும் தமிழ்ப் பொலிசாரும் 50 விகிதம் தமிழ்த் தெரிந்த பொலிசாரும் வட பகுதியில் கடமையாற்றுகிறார்கள். அடுத்த ஆண்டின் முற்பகுதியிலிருந்து சுமார் 75 விகிதம் தமிழ்த்தெரிந்த பொலிசார் இங்கு கடமையாற்ற அனுமதிக்கப்படுவார்கள்.

தற்போது இங்கு கடமையாற்றும் நூற்றுக்கணக்கான தமிழ்த் தெரியாத பொலிசார் இந்த ஆண்டுக்குப் பின் தென்னிலங்கைக்கு இடமாற்றம் செய்யப்படுவார்கள். அண்மையில் வட பகுதியில் ஏற்பட்ட சாதிக் கலவரங்கள், ஆலயப்பிரவேச பிரச்னைகளின் போது தமிழ்த் தெரிந்த பொலிசார் இப்பிரச்னைகளைத் தீர்க்கச் சாதுர்யமாகக் கடமையாற்றியதைத்தொடர்ந்தே பொலிஸ் தலைமைக் காரியாலயம் இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளதாக உயர்தர அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வட பகுதிக்குத் தமிழ்த் தெரிந்த பொலிசாரையே கடமையாற்ற நியமிக்க வேண்டுமெனத் தமிழ் எம். பி.க்களும் செனட்டர்களும் பிரதிநிதிகள் சபை, செனட் சபையிலும் கேட்டதும் இங்கு குறிப்பிடத்தக்கது. (கா. நி.)

நெடுந்தீவு படகுச்சேவை

யாழ்ப்பாணம், செவ். நெடுந்தீவு குறிகாட்டுவான் படகுச் சேவையைச் சீர்திருத்துவதற்கான முயற்சிகள் நடைபெறுகின்றன. கிராமசபைத்தலைவர் திரு. த. அம்பலம் யாழ் அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம் எம். பி. திரு ஜி. ஜி. பொன்னம்பலம், ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. நவரத்தினம் மற்றும் மராமத்து இலாகா அதிகாரிகள் ஆகியவர்களுடன் தொடர்புகொண்டு ஆவன செய்து வருகின்றார்.

பழமையடைந்துள்ள 'சில்வஸ்பிரே' பிரயாணப் படகின் [illegible] இன்றன.

"பழகுமொழியாக கொள்ளவேண்டும்''

அளவெட்டி, திங்கள் ''பண்டைத் தமிழிலக்கியங்கள் என்ன உட்பொருளைக் கொண்டிருக்கின்றன என்பதும் என்ன கருத்தை வெளிப்படுத்துவதற்காக எழுந்தன என்பதுமே முக்கியமானது'' என யாழ் இலக்கிய நண்பர் கழகத்தின் ஆதரவில் மல்லாகம் விவேகானந்தா படிப்பகத்தில் நடைபெற்ற இலக்கிய விரிவுரையரங்கில் பேசுகையில் புலவர் ம. பார்வதிநாதசிவம் கூறினார்.

மாவை தி. நித்தியானந்தன் தலைமையில் நடைபெற்ற இவ்விரிவுரையரங்கில் திரு. வ. பொன்னம்பலம் உரை நிகழ்த்துகையில், இலக்கிய படைப்பாளர்கள் மக்களின் உண்மையான வாழ்க்கைச்சம்பவங்களை பின்னணியில் கொள்ளவேண்டுமென்றும், மக்களைப்பற்றிப் பேசும் இலக்கியங்களே மக்களால் வரவேற்கப்பட வேண்டும். வாழ்க்கையுடன் தொடர்பற்ற இலக்கிய ஆக்கங்களால் பயனேற்படாதெனினும் தமிழ்மொழி வளரவும் மேலும் சிறக்கவும் வேண்டுமாயின் தமிழர்கள் யாவரும் அதனைப் பழகு மொழியாக கொள்ள வேண்டும் என்றும் சொன்னார்.

நாடும் நடப்பும்

நல்லூர் கந்தசுவாமி கோவிலின் வருடாந்த உற்சவம் சிறப்பாக முடிவடைந்துவிட்டது. நாட்டின் பல பாகங்களிலிருந்தும் ஆயிரக்கணக்கான மக்கள் வந்து கூடும் நல்லூர்த் திருவிழாவிலே சில திருடர்களும் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்வது வழக்கம்.

இம்முறை பொலிசார் மிகுந்த கண்காணிப்புடன் தமது கடமையைச் சிறப்பாகச் செய்துமுடித்துள்ளனர். திருட்டுச் சம்பவம் ஒன்று கூட நடைபெறவில்லை. திருட்டுப்போனதாகப் பொலிசில் ஒரு புகார் கூடச்செய்யப்படவில்லை. மக்கள் கூட்டத்தில் தவறவிடப்பட்ட பொருள்கள் மீட்டுக் கொடுக்கப்பட்டன. வழமைபோல் பெற்றோர் தவறவிட்ட அல்லது பெற்றோரைத் தவறவிட்ட குழந்தைகள் மீண்டும் அவரவரிடம் சேர்க்கப்பட்டனர்.

வீதிகள், தெருக்கள் சுத்தமாகவும் இருந்தன.

யாழ்ப்பாணம் பொலிசாரையும் மாநகர சபை அதிகாரிகளையும் எவ்வளவும் பாராட்டலாம்.

ஃ ஃ ஃ

செக்கோஸ்லாவாக்கிய சம்பவத்தைப் பயன்படுத்தி 1970-ம் ஆண்டில் நடக்க வேண்டிய அடுத்த பொதுத் தேர்தலை அடுத்த வருட ஆரம்பத்திலேயே நடத்துவதற்கு அரசாங்கம் முன்வரகூடுமென்று அரசியல் வட்டாரங்களில் பேசப்படுகிறது. உணவு உற்பத்தி இயக்கம் வெற்றியளித்திருப்பதாலும் அந்நிய செலாவணி உரிமைச்சான்றிதழ் திட்டத்தின் பயன் இன்னும் சில மாதங்களில் தெரியவருமென்று எதிர்பார்ப்பதாலும், செக்கோஸ்லாவாக்கிய சம்பவம்குறித்து எதிர்க்கட்சிக் கூட்டணிக்குள் 'அபிப்பிராய வேறுபாடு' இருப்பதாலும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்த" அரசாங்கம் முன்வரக்கூடும் என்று கருதப்படுகிறது.

புதிய புதிய அரசியல் கட்சிகள் தோன்றிக்கொண்டிருக்கின்றன. இன்னும் சில புதிய கட்சிகள் தோன்றக் கூடிய அறிகுறிகள் தென்படுகின்றன. அடுத்த தேர்தலில் எந்தெந்தத் தொகுதியில் எவரை நிறுத்தலாம் என்ற ஆலோசனையில் அரசியல் கட்சிகள் எல்லாமே ஈடுபட்டிருக்கின்றன. பிரதமரும் கூடச் சில பிரமுகர்களுடன் ஆலோசனை நடத்தியிருக்கிறாராம். இவற்றையெல்லாம் சேர்த்துப் பார்த்தால் அடுத்த தேர்தல் அடுத்த வருடத்துக்குள்ளேயே வரலாமென்றே எதிர்பார்க்கத் தோன்றுகிறது.

தமிழ்ப் பகுதிகளில் புதிய கூட்டணியொன்றும் உருவாகலாமென்றும் அதற்கான முயற்சிகள் நடைபெற்றுவருவதாகவும் கூறப்படுகிறது. ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் ஒரு கட்சியில எதிர்க்கட்சிகளுடன் கூட்டணி அமைத்துக்கொள்ளக்கூடுமென்று அரசியல் வட்டாரங்களில் பேசிக் கொள்ளப்படுகிறது. எல்லாம் நாட்டுத் தலைவர்களின் நோக்கமே அடுத்த தேர்தல் தானே!

— ஊர்சுற்றி.

செக். தலைநகரில் நிலைமை மோசம்

‘பேச்சு வார்த்தைகளை நிறுத்திவிட்டு உடனடியாகத் தாயகம் திரும்புக’

ரஷ்யாவிலிருக்கும் செக். தலைவர்களுக்கு அழைப்பு

லண்டன், ஆகஸ்ட் 26

மாஸ்கோவில் சோவியத் தலைவர்களுடனான பேச்சுவார்த்தைகளை நிறுத்திவிட்டு உடனடியாகத் தாயகம் திரும்புமாறு செக்கோஸ்லாவாக்கியா கோஷ்டிக்குத் தலைமை தாங்கும் செக். நாட்டு ஜனாதிபதி திரு. ஸ்வபோடாவை செக்கோஸ்லாவாக்கிய கம்யூனிஸ்ட் கட்சியும், செக். அரசாங்கமும் கேட்டுக்கொண்டுள்ளது. நிலைமை மோசமாகிக்கொண்டு போவதால் பிரச்னை குறித்து ஆலோசனை செய்வதற்காகவே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

செக். தலைவர்களுக்கும், சோவியத் தலைவர்களுக்குமிடையிலான நான்காவது நாள் பேச்சுவார்த்தை இன்று தொடர்ந்து நடைபெறுமென்றும், நேற்றைய பேச்சுவார்த்தைகள் நட்புறவான சூழ்நிலையிலும், இரு நாட்டுத் தலைவர்களும் மனம்விட்டுப் பேசிய ஒரு நேச சூழ்நிலையிலும் நடைபெற்றதாக “டாஸ்” அறிவித்தது.

பேச்சுவார்த்தைகளில் வார்ஸோ தலைவர்கள்

வார்ஸோ ராணுவ ஒப்பந்த நாடுகளான போலந்து, கிழக்கு ஜெர்மனி, ஹங்கேரி, பல்கேரியா ஆகிய நாடுகளின் தலைவர்களும் மாஸ்கோ பேச்சுவார்த்தைகளில் கலந்துகொண்டுள்ளனர். செக். நாட்டு கோஷ்டியில் மேலும் மூன்று தலைவர்கள் பேச்சுவார்த்தைகளில் கலந்துகொண்டுள்ளனர். இவர்களில் இருவர் செக். கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர் திரு. டுப்செக்கின் கொள்கைகளைத் தீவிரமாக ஆதரிப்பவர்கள்.

தலைநகரில்...

செக்கோஸ்லாவாக்கியாவின் தலைநகரான பிராக்கில் நிலைமை மோசமாகிக் கொண்டிருப்பதாக செய்திகள் தெரிவிக்கின்றன. சோவியத் ஆக்கிரமிப்புக்கு எதிராக நேற்று மக்கள் கூட்டமொன்று கண்டனச் சுவரொட்டிகளை எடுத்துச் சென்றபோது சோவியத் துருப்புகள் ஜனக் கூட்டத்தின் தலைக்கு மேல் சுட்டனர். சிலர் காயமடைந்தனர். இதனைத் தொடர்ந்து குமுறிய மக்கள் கூட்டம் சோவியத் துருப்புகளுக்கு எதிராகப் பலத்த ஆர்ப்பாட்டம் நடத்தினது. இதையடுத்து சோவியத் துருப்புகள் நான்கு திசைகளையும் நோக்கி துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர். செக். தலைநகர் வீதிகளில் துப்பாக்கி வெடி ஒலி கேட்டுக் கொண்டேயிருந்தது.

‘பொறுமையாக இருங்கள்’

செக். மக்களுக்கு நேற்று செக்கோஸ்லாவாக்கிய சுதந்திர வானொலி உருக்கமான ஒரு வேண்டுகோளை விடுத்தது.

‘சோவியத் துருப்புகளின் வன் செயல்களால் நிலைமை மோசமாகிக் கொண்டிருக்கிறது. ஆயினும் நாட்டில் இரத்தக் களரியை ஏற்படுத்தாத விதத்தில் பொறுமையாகவும் நிதானமாகவும் இருங்கள். அமைதியைக் கடைப்பிடியுங்கள்’ என்று அந்த வேண்டுகோள் கேட்டுக் கொண்டது.

செக்.கில் மாபெரும் ஆர்ப்பாட்ட ஏற்பாடுகள்

நாளை செக்கோஸ்லாவாக்கியாவின் தலைநகரான பிராக்கில் சோவியத்தின் ஆக்கிரமிப்புக்கு எதிராக மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடாத்துவதற்குச் செக்கோஸ்லாவாக்கிய தேசிய சட்டசபை ஏற்பாடு செய்துள்ளது. இந்த ஊர்வலத்துக்கு எதிரான நடவடிக்கைகளில் சோவியத் துருப்புகள் இறங்கும்போது பெருத்த உயிர்ச்சேதம் ஏற்படலாமென அஞ்சப்படுகிறது.

‘எதிர்ப்புரட்சி வேண்டாம்’

‘எதிர்ப் புரட்சிக்கு வழிவகுக்க வேண்டாம்’ என செக்கோஸ்லவாக்கியாவில் ஆக்கிரப்பு நடாத்தியுள்ள சோவியத்துருப்புகளின் தலைமைத் தளபதி செக். தொழிலாளர்களுக்கு எச்சரிக்கையொன்றை விடுத்துள்ளார். இந்த எச்சரிக்கை செக். தொழிலாளர்களுக்கிடையில் மேலும் வெறுப்புணர்ச்சியை ஏற்படுத்தியிருப்பதாக பிராக்கிலிருந்து கிடைக்கும் செய்திகள் கூறுகின்றன.

---

3 செக். விமானங்களை பல்கேரியா பிடித்தது

ஐ. நா. பாதுகாப்புச் சபை சோவியத் ஆக்கிரமிப்புப்பற்றிய தனது விவாதத்தை ஒத்திவைத்தது. மாஸ்கோவில் செக்கோஸ்லவாக்கிய தலைவர்களுக்கும், ரஷ்யத் தலைவர்களுக்குமிடையில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் பேச்சுவார்த்தைகள் பற்றிய விபரம் வெளியானதும் சபை மீண்டும்கூடி தனது விவாதத்தை நடாத்துமென அறிவிக்கப்பட்டது.

பல்கேரியாவில் மூன்று செக்கோஸ்லாவாக்கிய விமானங்கள் பிடித்துவைக்கப்பட்டுள்ளன. இவைகள் பல்கேரியாவில் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளன. இந்த விமானங்களை ஓட்டிவந்தவர்களுடன், சில சிப்பந்திகளும் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அரக்கத் தனமான செயல் என ராஜாஜி வர்ணிப்பு

உலகத்தின் பல பகுதிகளிலிருந்தும் சோவியத் ரஷ்யா, செக்கோஸ்லாவாக்கியாவில் நடாத்தியிருக்கும் ஆக்கிரமிப்புக்குறித்து மேலும் பலத்த கண்டனங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன. லண்டன் பிரிட்டிஷ் தொழிற் கட்சியைச் சேர்ந்த பிரமுகர் சோவியத் துருப்புகளை செக்கிலிருந்து உடனடியாக விலக்காவிட்டால், உலக அமைதிக்குப் பெருத்த கேடு விளையுமென்று குறிப்பிட்டுள்ளார். இந்திய சுதந்திரக் கட்சித் தலைவரும், பிரபல அரசியல் வாதியுமான திரு. ராஜாஜி சோவியத் யூனியனின் நடவடிக்கை அரக்கத்தனமான செயலென வர்ணித்துள்ளார். அடக்கி ஒடுக்கி ஒருநாட்டின் சுதந்திரத்தைப்பறிக்கும் ரஷ்யா தனது படைகளை உடனடியாக செக்கிலிருந்து [illegible] கொள்ள வேண்டுமென்று திரு. ராஜாஜி கேட்டுக் கொண்டுள்ளார்.

பியாவ்ரா மீது விமான தாக்குதல்

லண்டன், ஆக. 26

சமஷ்டி நைஜீரிய விமானங்கள் பியாவ்ராவில் குண்டு வீச்சுத் தாக்குதலை நடத்தினர். இத்தாக்குதலில் சிலர் உயிரிழந்ததாகவும், பலர் படுகாயமடைந்[illegible]

ஜனநாயகக்கட்சிவேட்பாளர் தேர்வு நடக்கிறது

அமெரிக்க உபஜனாதிபதி ஹம்ப்ரி வெற்றிபெறுவார்?

சிக்காக்கோ, ஆக. 26

இவ்வருடம் நவம்பரில் நடைபெறவிருக்கும் அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடுவதற்கான தனது வேட்பாளரைத் தேர்ந்தெடுப்பதற்காக அமெரிக்க ஜனநாயகக் கட்சி இன்று இங்கு கூடியுள்ளது. இந்தத்தேர்தலில் அமெரிக்க உபஜனாதிபதி திரு. ஹம்ப்ரி வெற்றி பெறுவாரென எதிர்பார்க்கப்படுகிறது.

செனட்டர் மக்கார்த்தி வடவியட்நாம் மீது அமெரிக்கா உடனடியாகக் குண்டு வீச்சை நிறுத்தவேண்டுமென்ற பிரச்னையில் இன்று நீண்டநேரம் விவாதம் நடாத்துவார் எனவும் அறிவிக்கப்படுகிறது.

சிக்காக்கோவில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. நீல நிறத்தொப்பி அணிந்த பொலிஸார் பலத்த காவல் புரிந்துவருகின்றனர்.

இஸ்ரேல்-ஜோர்டான்: கடும்பீரங்கிச்சண்டை

லண்டன், ஆக. 25

இஸ்ரேலிய-ஜோர்டான் துருப்புகளுக்கிடையில் கடும் பீரங்கிச் சண்டை நடைபெற்றுக் கொண்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

ஜோர்டான் பள்ளத்தாக்கில் போர் நிறுத்த எல்லைக் கோட்டில் பீரங்கி தொடர்ந்து முழங்கிக்கொண்டிருந்தன.

ஜோர்டானே முதலில் சண்டையைத் தொடக்கியதாக இஸ்ரேல் குற்றம் சாட்டியது. இதேபோன்று இஸ்ரேலே முதலில் சண்டையை ஆரம்பித்ததாக ஜோர்டான் குற்றஞ்சாட்டியது.

செக். ஜனாதிபதியின் ரஷ்ய விஜயம் பற்றி அமெரிக்கா

வாஷிங்டன், ஆக. 26

செக்கோஸ்லவாக்கிய ஜனாதிபதி ஸ்வபோடாவின் சோவியத் விஜயம், சோவியத் படைகளையும், வார்சோ ஒப்பந்த நாட்டுப் படைகளையும் பின்வாங்கச் செய்வதற்காக இருக்குமானால் நிச்சயம் வெற்றிகிட்டும் என்று அமெரிக்கா நம்பிக்கை தெரிவித்திருக்கின்றது.

அமெரிக்க வெளிவிவகார அமைச்சின் பேச்சாளரான ரொபர்ட் ஜே. மக்லோஸ்கி பத்திரிகையாளர் மத்தியில் கருத்து தெரிவிக்கும்போது செக். நாட்டை ஆக்கிரமித்துள்ள வார்சோ படைகளை பின்வாங்கச் செய்வதில் ஜனாதிபதி ஸ்வபோடா தீவிரத்தை காட்டுவதில் நிச்சயம் அவருடைய நோக்கம் வெற்றியளிக்குமென நாம் நம்புகிறோம் என்றார்.

பிரிட்டிஷ் அமைச்சர் ருமேனியாசெல்வார்

லண்டன், ஆக. 26

பிரிட்டிஷ் வெளிநாட்டு மந்திரி திரு. மைக்கல் ஸ்டூவார்ட் அடுத்த மாத முற்பகுதியில் ருமேனியாவுக்கு விஜயஞ்செய்வார். செக்கோஸ்லவாக்கியா மீது ரஷ்யா ஆக்கிரமிப்புச் செய்துள்ளதையடுத்து பிரிட்டிஷ் அமைச்சரின் பல்கேரியா, ஹங்கேரிய விஜயங்கள் ரத்துச்செய்யப்பட்டுள்ளதாக இன்று அறிவிக்கப்பட்டது.

திரு. ஸ்டூவார்ட், முன்பு திட்டமிட்டுள்ளதன் பிரகாரம் மேற்படி இரு கம்யூனிஸ்ட் நாடுகளுக்கும் விஜயஞ்செய்ய மாட்டாரென நேற்று லண்டனிலுள்ள பல்கேரிய, ஹங்கேரிய நாட்டு ஸ்தானிகர்களுக்கு அறிவிக்கப்பட்டது.

திரு. ஸ்டூவார்ட் அடுத்த மாதம் 8ந் தேதி ருமேனியாவுக்கு விஜயஞ்செய்வார். ருமேனியாவில் மூன்று தினங்கள்வரை அவர் தங்கியிருப்பார்.

இலங்கைக்கு ‘ஆக்ஸ்பாம்’ உதவி

லண்டன், ஆக. 26

பிரிட்டனிலுள்ள தர்மஸ்தாபனமான ‘ஆக்ஸ்பாம்’ இலங்கைக்கு வெள்ள நிவாரண நன்கொடையாகவும், அபிவிருத்தி உதவியாகவும் 3,500 பவுண்டுகளை கடந்த வருடம் வழங்கியுள்ளது.

1967-68ம் ஆண்டுக்கான ‘ஆக்ஸ்பாம்’ வருடாந்த அறிக்கையில் இந்த விபரம் கொடுக்கப்பட்டிருக்கிறது.

மொத்த உதவித் தொகையில் 8700 பவுண்டுகள் குடும்பக் கட்டுப்பாட்டு இயக்கத்திற்கும், மிகுதித் தொகை [illegible] வெள்ள நிவாரண உதவியாகவும் வழங்கப்பட்டன.

பஸ்ஸுக்கு பாலகன் பலி

கொழும்பு, திங்கள்

சுமார் 5 வயதுள்ள பாலகன் ஒருவன் இ. போ. ச. வின் இரட்டைத் தட்டு பஸ் ஒன்றிற்குள் அகப்பட்டு பரிதாபமாக ஸ்தலத்திலேயே மரணமானான். பிலமரச் சந்திக்கருகாமையில் இது நடைபெற்றது. மேற்படி பஸ்ஸின் சாரதி பொலிஸ் பாதுகாப்பில் வைக்கப்பட்டுள்ளார். (வி. தி.)

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்

செவ்வாய் 27—8—68

[செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00]

844 மீற்றர் அல் 61 மீற்றர்

காலை 6-30 நாதாஞ்சலி, 6-35 சைவநற்சிந்தனை, 6-40 இஸ்லாமியநற்சிந்தனை, 6-45 பக்திப்பாடல்கள், 7-30 குரல்வகை, 8-00 இசைவேளை, 8-15 இஸ்லாமியகீதங்கள்:

844 மீற்றர் அல் 49 மீற்றர்

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்ப இசை.

844 மீற்றர் அல் 61 மீற்றர்

மாலை 5-00 பிறந்தநாள் வாழ்த்துக்கள், 5-30 நேயர்விருப்பம்.

இரவு 6-15 தமிழோடிசை பாடல், 6-30 விளையாட்டு விமர்சனம் — சி. சண்முகம், 6-45 பா வளம், 7-00 கிராமசஞ்சிகை, 7-30 முத்திநெறி — சைவசஞ்சிகை, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-30 பேச்சு, 9-45 பாட்டு — சத்தியபாமா இராசலிங்கம்.

இன்றைய பலன்

(27 - 8 - 68)

ஆவணி மீ 11 உ

செவ்வாய்க்கிழமை

திதி- சதுர்த்தி இரவு 1-34 மேல் பஞ்சமி.

நட்சத்திரம் அத்தம் பகல் 4-02 மேல் சித்திரை.

ராகுகாலம் - 3-05 4-35.

சுபநேரம் - 10-35— 12-05

இன்று பிறந்தவர்களுக்கு— இவ்வாண்டு பொன்னான ஆண்டாகும் குடும்பத்தில் கொண்டாட்டம். உத்தியோகத்தர்களுக்கு உயர்வு. பெண்கள் வாழ்வில் பெருமகிழ்ச்சி! வணிகத்துறையில் அழகான முன்னேற்றம். புத்திர வளர்ச்சி குன்றாது விருந்தினர் வரவும். வெற்றிக்குரிய ஆண்டாகும்.

மேஷம்- ஏக்கத்தின் சாயல் ஏமாற்றமுண்டு.

ரிஷபம்- தொழில்நலன் தூரத்துச் செய்தி

மிதுனம்- பிள்ளையின் பாசம் பிரிந்தவர் வரவு.

கடகம்- முயற்சியால் வரவு முன்னேற்றம் உண்டு.

சிம்மம்- ஏமாந்தநிலை எதிர்பாராத தடை.

கன்னி- சகோதரச் சுகக் குறைவு. சஞ்சல மிகுதி.

துலாம்- போதுமென்ற மனம் பொன்னான வாழ்வு

விருச்சிகம்- மோசடி நடக்கும், விழிப்புடன் இரு.

தனுசு- நல்ல முடிவு நன்மைகள் பெருகும்.

மகரம்- புத்திர [illegible] புதிய கல்வியின் பாதை.

கும்பம்- முதியவர் உறவு, முன்னேற்றப் பாதை:

மீனம்- காதலர் வாழ்வில் கைகூடும் நிலை.

சோதிடக்கலாநிதி
திருமலை வேலுப்பிள்ளை

தீவுப்பகுதி தண்ணீர் கஷ்டம்

ஆட்சிமன்றத்தில் அமிர்தலிங்கம் பேசியதென்ன?

யாழ்ப்பாணம், செவ்வாய்

ஆட்சிமன்றத்தில் தீவுப்பகுதி மக்களுக்கு இருந்து வரும் தண்ணீர்க் கஷ்டம் சம்பந்தமாக திரு. அமிர்தலிங்கம் எம். பி. தெரிவித்த கருத்தை நாரந்தனையில் சமீபத்தில் ஒரு கூட்டத்தில் ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. நவரத்தினம் பிரஸ்தாபித்ததாக வெளிவந்த செய்தி குறித்து திரு. அமிர்தலிங்கம் அறிக்கையொன்றை விடுத்துள்ளார்.

தமதுபேச்சின் விபரம் ஹன்சாட்டில் இடம்பெற்றிருப்பதுபற்றி தெரிவித்துள்ள திரு. அமிர்தலிங்கம் தான் பின்வருமாறு பேசியதாகக் குறிப்பிட்டுள்ளார். புங்குடுதீவில், அனலைதீவில், காரைநகரில் தண்ணீர்த் திட்டங்களை ஆரம்பிப்பதற்காக எத்தனையோ நிபுணர்களை அனுப்பி பரிசீலனைகள் நடைபெறுகின்றன. தண்ணீர்த்திட்டங்களை ஆரம்பிக்க அதாவது ஓர் இடத்திலிருந்து தண்ணீரை விநியோகிக்க முதலில் ஓர் இடத்தில்தண்ணீர் இருக்கவேண்டும் ஒரு கிணற்றைக்கொண்டு அதற்குப் போதிய அளவுதண்ணீர் இருக்கின்றதா என்று பரிசீலனை செய்து பார்த்துத்தான் தண்ணீர்த் திட்டங்களை ஆரம்பிக்கமுடியும். அப்படியான பரிசீலனைகள் போதிய அளவு பலனைக் கொடுக்காமல் இருக்கலாம். உள்ளூராட்சி அமைச்சர் சில திட்டங்களைக் கொண்டுவருவதில் இப்படியான தடைகள் இருக்கின்றனவே அல்லாமல் வேறு ஒன்றும் அல்ல என்பதை ஊர்காவற்றுறைப் பிரதிநிதி நன்குஅறிந்திருந்தும் அதற்கு மாறாகப் பேசுவதுதான் சரியற்றதாகும். குற்றம்சாட்டினால் சாட்டலாம் நாம் ஒன்றும் செய்யவில்லை என்றுசொல்லலாம். ஆனால் வேண்டுமென்றே உண்மையைமறைத்துக் குற்றச்சாட்டுக்களைக் கொண்டுவருவதை இனிமேலாவது தவிர்க்கவேண்டுமென்று நான் ஊர்காவற்றுறைப் பிரதிநிதியை கேட்டுக்கொள்ளுகிறேன்"

வேலைக்குத் தகுதி இல்லை: 100 வாலிபர் வீடு திரும்பினர்

கொழும்பு, திங்கள்

கொழும்பு தொழில் இலாக்காவினால் தெரிவு செய்யப்பட்டு நேர்முகப் பரீட்சைக்கு அனுப்பப்பட்ட சுமார் நூறு வாலிபர்களை இரத்மலானை பொது வேலைப்பகுதியினர் வேலைக்கு தகுதியில்லையென நிராகரித்துவிட்டார்களாம். தகுதியுள்ளவர்கள் என தொழில் இலாக்காவினால் தெரிவுசெய்யப்பட்ட இவ்வாலிபர்களிடம் குறிப்பிட்ட வேலைக்குரிய அத்தாட்சிப் பத்திரங்கள் இல்லாத காரணத்தினாலேயே அதிகமானவர்களை தகுதியில்லையென நிராகரித்ததாகக்கூறப்படுகிறது.

இதன்காரணமாக தெரிவு செய்யப்பட்ட வாலிபர்கள் விரக்தியடைந்து வீடுதிரும்பினராம். (வி. நி.)

உப-தபாற்கந்தோர்

உடுவில், திங்கள்

ஏழாலைக் கிராமத்துக்கு அண்மையிலுள்ள குப்பிளானில் ஒரு புதிய உப-தபால் நிலையம் அரசாங்கத்தால் நிறுவப்பட்டுள்ளது.

No. 000
NATIONAL LOTTERIES
Cents Fifty
26 M 0091

இன்றைய விலைமதிக்கமுடியாத
பரிசு: புத்தம் புதிய கார்

என்றாலும், 50 சதத்துக்கே உங்களுக்குக் கிடைக்கலாம். மேலும், பெருந்தொகையான பணத்துக்குக் காசோலையும் கிடைக்கும்!

தேசிய லொத்தர் டிக்கெற் வாங்கினால் மட்டும் இது உங்களுக்குக் கிடைக்கும். ஆம், நீங்களும் புத்தம் புதிய கார் ஒன்று பெற்றுக்கொள்ளலாம்.

சீட்டிழுப்பு இல. 209. தேதி: 29-8-68
புத்தம் புதிய போர்ட் கோர்டினா கார்
ரூபா 17,385/- *

சீட்டிழுப்பு இல. 210 தேதி: 5-9-68
புத்தம் புதிய மொறிஸ் '1100' கார்
ரூபா 18,850/- *

* தீர்வை உட்பட வழமையான கொம்பனி விலைப்பட்டியல் இதில் அடங்கியுள்ளது.

இந்தக் கார்களை கொள்முதல் செய்வதாக இருந்தால் சீட்டிழுப்பின் 14 நாட்களுக்குள்ளாகவே செல்லுபடியாகும்.



இன்றே ஒரு தேசிய லொத்தர் டிக்கெற் வாங்குங்கள்!

இலங்கை உதைபந்தாட்ட சங்க

கமிஷன் விசாரணை இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், செவ்வாய் யாழ் உதைபந்தாட்டச் சங்கத்திற்கும், இச்சங்கத்திலிருந்து வெளியேறிய 14 விளையாட்டுக்கழகங்களுக்குமிடையில் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியை சுமுகமாகத் தீர்த்து வைப்பதற்காக இலங்கை உதைபந்தாட்டச்சங்கம் ஓர் கமிஷனை யாழ்ப்பாணம் அனுப்பியுள்ளது. இக்கமிஷன் இவ்விரு சாராரையும் இன்று பிற்பகல் 2 மணியளவில் பொலிஸ் பொழுதுபோக்கு கழக மண்டபத்தில் சந்தித்து இரு சாராரின் முறைப்பாடுகளையும் ஆராயவிருக்கிறது.

இரு தரப்பினரும் தங்கள் தங்கள் நிலையை விளக்கி எல்லோருக்கும் அறிக்கைகள் விடுத்துள்ளனர்.

(தே. நி.)

சவாரிப் போட்டி முடிவுகள்

சுழிபுரம், திங்கள் பொன்னாலை-நெல்லியான் கிராம முன்னேற்றச் சங்க ஆதரவில் மாட்டுவண்டிச் சவாரிப்போட்டி பொன்னாலைக் குள மைதானத்தில் நடைபெற்றது. இருபத்தைந்து இரட்டை மாட்டு வண்டிகள் போட்டியில் கலந்துகொண்டன. போட்டியில் வெற்றி பெற்றவர்கள் விபரம் வருமாறு:

ஏ பிரிவு: பொ. சங்கரப்பிள்ளை (மயிலிட்டி), ச. திருச்செல்வம் (மயிலிட்டி), செ. இளையதம்பி (கரவெட்டி).

பி. பிரிவு: ஆ. சுப்பிரமணியம் [திருநெல்வேலி], வெ. பிள்ளையார் [உடுவில்], க. இரத்தினதுரை [சுழிபுரம்].

நெடுந்தீவு விளையாட்டுப்போட்டி

நெடுந்தீவு, திங்கள் இலங்கை விளையாட்டமைச்சின் ஆதரவின்கீழ் நடாத்தப்படும் விளையாட்டுப்போட்டி இம்மாதம் 31-ந் திகதி நெடுந்தீவு மத்தி சிக்கிரியாம்பள்ளம் மைதானத்தில் திரு. சி. வேல்தம்பி நெடுந்தீவுக் காரியாதிகாரி தலைமையில் நடைபெறும். நெடுந்தீவு விளையாட்டுத்துறை இலாகா நடத்தும் முதலாவது விளையாட்டுப் போட்டியாகும் இது. இதற்கான ஒழுங்குகளை நெடுந்தீவு விளையாட்டுத்துறை அதிகாரி திரு. என். எம். முருகேசு செய்துவருகிறார்.

விளையாட்டு மைதானம்

சுழிபுரம், திங்கள் வலிகாமம் மேற்கு விளையாட்டுக் கழகத்தினர் ஒரு பொது விளையாட்டு மைதானத்தை அமைக்கத் துரிதமாக ஈடுபட்டுள்ளனர். வழக்கம்பரை அம்மன் கோவிலுக்கு முன்பாகவுள்ள அரசாங்க நிலத்தை செப்பனிட்டு ஒரு சிறந்த விளையாட்டு மைதானமாக அமைக்க ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கன்னியருக்கு வெண் பொன் விழா

பருத்தித்துறை திங்கள் சங். தாயார் யூலாலி, சங். சலோமி மேரி அலெக்சாந்திரா மற்றும் 8 கன்னியருக்கு இளவாலை கன்னியர் மடாலயத்தில் வெண்பொன் விழா எடுக்கப்பட்டது. மேற்றிராணியார் வண. ஜெ. எமிலியானுஸ்பிள்ளை விழாவுக்குத் தலைமைதாங்கினார்.

தரகர் தொல்லை

உரும்பராய், திங்கள் சுன்னாகம் சந்தையில் தரகர் தொல்லையால் விவசாயிகளும், பொருட்களை வாங்குபவர்களும் பெருத்த அதிருப்தி அடைந்துள்ளனர். தரகர்களின் தலையீட்டால் விவசாயிகள் தமது உற்பத்திகளை விற்க முடியாத நிலைக்குள்ளாவதாகவும், வாங்குபவர்கள் பொருட்களை வாங்கமுடியாத நிலைக்குள்ளாவதாகவும் கூறப்படுகிறது.

இமையாணன் வெற்றி

உடுப்பிட்டி, திங்கள் உடுப்பிட்டி நவஜீவன் விளையாட்டுக்கழகத்திற்கும், இமையாணன் விளையாட்டுக் கழகத்திற்குமிடையே நடைபெற்ற கைப்பந்தாட்ட மோதலில் இமையாணன் கோஷ்டி 2—0 ஆட்டங்களால் உடுப்பிட்டிக் கோஷ்டியை வெற்றியீட்டியது. கரவெட்டி சுடரொளி விளையாட்டுக்கழக ஆதரவில் நடைபெற்ற இக்கைப்பந்தாட்டப் போட்டிக்குத் திரு. எஸ். சிதம்பரநாதன் மத்தியஸ்தராகக் கடமையாற்றினார்.

சிவப்பிராமண சங்கம் ஆட்சேபம்

உடுவில், திங்கள் அகில இலங்கை சிவப்பிராமண சங்கத்தின் 10-வது வருட மகா சபைக் கூட்டம் அண்மையில் கொழும்பில் நடைபெற்றது. இக்கூட்டத்துக்கு உடுவில், நயினாதீவு, ஆகிய இடங்களிலிருந்து பல அங்கத்தவர்கள் வந்திருந்தனர். சிவஸ்ரீ கு. பஞ்சநாதக் குருக்களின் தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் வேதாகமக் கல்வியின் முக்கியத்துவம் பற்றி சிவஸ்ரீ சோ. இராமசாமி சர்மா எடுத்து விளக்கினார். கதிர்காம மடங்களை அப்புறப்படுத்துதல் கூடாது என்று அரசாங்கத்துக்கு ஆட்சேபனை தெரிவிப்பதென்றும் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

புதுவருட உத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர். தலைவர்- கு. இரத்தின சபாபதிக்குருக்கள், உபதலைவர்- சு. சிவகடாட்சக்குருக்கள், காரியதரிசி- வி. குஞ்சிதபாதக்குருக்கள், உபகாரியதரிசி- வி. சுப்பிரமணிய சர்மா, தனாதிகாரி- வி. பரமேஸ்வர சர்மா, கணக்குப்பரிசோதகர்- வி. ஹரிஹரசர்மா.

ஏழுபேர்கொண்ட நிர்வாகசபையொன்றும் தெரிவு செய்யப்பட்டது.

வைதீகவிஷயங்களை கவனிப்பர்

உடுவில், திங்கள் பிராமண சமூகத்தவர்களின் வைதிக விஷயங்களை கவனிக்கவும், பாடசாலைகளில் கல்வி கற்பிக்கவும் கோண்டாவில் மேற்கைச் சேர்ந்த திரு. கே. நாராயணசாஸ்திரியை அகில இலங்கை சிவப் பிராமண சங்கம் நியமித்துள்ளது.

வரி விளம்பரம்

கல்வி

வடமராட்சி மாதர் கலா மன்றத்தினரால் பிரபல அண்ணாமலைப் பல்கலைக்கழக மிருதங்க வித்துவானால் 30-8-68 முதல் மிருதங்க வகுப்பு ஆரம்பிக்கப்படவிருக்கிறது. ஆண், பெண் இருபாலாரும் விண்ணப்பிக்கலாம் — திருமதி இராஜேஸ்வரி பாலசுப்பிரமணியம். (தனாதிகாரி), "பாலராஜேஸ்வரம்", ஓராங்கட்டைச்சந்தி, பருத்தித்துறை (தொலைபேசி. இல. 578); திருமதி விஜயலட்சுமி குலத்துங்கம், [காரியதரிசி] தம்பசிட்டி, பருத்தித்துறை. 46

தேவை

யாழ்ப்பாணத்திலுள்ள பிரபல வர்த்தக ஸ்தாபனத்தின் பெற்றோல் நிலையங்களில் பெற்றோல் நிரப்புபவர்களும், வெளிச் சென்று விற்பனை செய்வதற்கு விற்பனையாளர்களும் தேவை. தேர்ந்தெடுப்பவர் பதவிக்கேற்ப பிணைப்பணம் கட்ட வேண்டும். விளம்பர இல 37, மே/பா 'ஈழநாடு', யாழ்ப்பாணம். 37

நல்ல அனுபவமுள்ள டிராக்டர் டிறைவர்கள் தேவை. நேரில் வரவும். ஆ. ச. சங்கரப்பிள்ளை அன் பிறதர்ஸ், 166, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 36

வின்ஸர்
தினசரி 3 காட்சிகள்
ரவிச்சந்திரன் ஜெயலலிதா
நடித்த
மாடிவீட்டு
மாப்பிள்ளை

2-வது வாரம்
ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-45
AVM.ராஜன் - புஷ்பலதா
நடித்த
கற்பூரம்

மானிப்பாய்
வெஸ்லி சினிமா
தினசரி 2-30 6-30 9-30
எஸ்.எஸ்.ஆர்.-தேவிகா
நடித்த
மறக்க முடியுமா?

62-வது தினம்!
ராணி
(யாழ்ப்பாணம்)
ஜெமினி — சரோஜாதேவி
நடித்த
பணமா பாசமா

3-வது வாரம்
மனோகரா
[யாழ்ப்பாணம்]
தினசரி
6-30, 9-30 மணி
ஜெய்சங்கர் - விஜயலக்ஷ்மி
கே. பி சுந்தராம்பாள்
நடித்த
உயிர்மேல்
ஆசை

REGAL JAFFNA
Daily at
4-45, 7-00 & 9-45 p.m.
Tony Anthony
Luciana Paluzzi
in
Wounds Of Hunger
[Adults]

அனுபவமுள்ள வைத்தியரின்
மேற்பார்வையில்
சித்த வைத்திய மருந்துகள்
ஆயுர்வேத மருந்துகள்
மருந்துச் சரக்குகள்
கிடைக்குமிடம்:
சுந்தரம் பிறதர்ஸ்
73, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்

[illegible] (கொழும்பு)
கிங்ஸ்லி (கொழும்பு)
மைலன் (கொழும்பு)
விஜயா (மட்டுநகர்)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
ஸ்ரீ கிருஷ்ணா (திருமலை)
ரவிச்சந்திரன்
ஜெயலலிதா
மனோரமா
நாகேஷ்
முத்துராமன்
நடித்த
ஸ்ரீ விநாயகா
பிக்சர்ஸ்
நான்

கெபிட்டல்
(கொழும்பு)
ராஜ்கபூர் — வைஜயந்திமாலா
நடித்த
சங்கம்

சிங்கம் மார்க்
சந்தனாதித்
தைலம்
[illegible] நாட்டிலே எங்குமே கிடைக்கும்

"மாணவர்களின் அவல நிலையை பரிசீலியுங்கள்"

யாழ்ப்பாணம், செவ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய விடுதியிலுள்ள 45 மாணவர்களுக்குப் புதிய தவணையிலிருந்து விடுதியில் தங்குவதற்கு அனுமதியளிக்கப்படமாட்டாதென அதிபர் அறிவித்துள்ளாரென்றும், வருட மத்தியில் மாணவர்களுக்கு இந்த அறிவித்தல் கொடுக்கப்பட்டிருப்பதால் அவர்கள் தகுந்த தங்குமிடம் இல்லாமல் கஷ்டப்படுவார்கள் என்றும், மாணவரின் இந்த அவல நிலையைப் பரிசீலனைசெய்து விடுதி மாணவர்களைத் தொடர்ந்து இவ்வருட இறுதிவரையாவது இருக்க அனுமதியளிக்குமாறு வட பகுதி வித்தியாதிபதிக்கு புரக்டர் செ. யோகராசா எழுதியுள்ள மகஜரொன்றில் குறிப்பிட்டுள்ளார். இதன் பிரதிகள் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலய அதிபர், பெற்றோர் ஆசிரியர் சங்கம், நல்லூர் எம். பி. ஆகியோருக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

திருமணம்

நிகழும் 28-8-68 புதன்கிழமை பிற்பகல் 5 மணிக்கும் 7 மணிக்குமிடையில் வரும் நல்லோரையில் செல்வி சரோஜினிதேவிக்கும், செல்வன் சுந்தரேஸ்வரனுக்கும் திருவருட்துணையால் திருமணம் நிகழும். பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் நிகழும் இத்திருமண வைபவத்திலும், (4-9-68) மாலை 5 மணிக்கு மணமகன் இல்லத்தில் நடைபெறும் வரவேற்பு வைபவத்திலும் கலந்துகொள்ளுமாறு நண்பர்களையும் உறவினர்களையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தி. ச. முத்துலிங்கசாமியும் பாரியாரும்
333, காலிவீதி,
கொள்ளுப்பிட்டி.

க. முத்துக்குமாருவும் பாரியாரும்
சரசாலை - சாவகச்சேரி
917

இம் மாதம் 30-ம் திகதி மாலை
யாழ். திறந்த வெளியரங்கில்

யாழ்ப்பாண
ஐக்கிய வியாபாரச் சங்க
பொன்விழாவை
முன்னிட்டு
'ஈழநாடு' ஸ்தாபனத்தார்
அளிக்கும்

கலை விழா

நிகழ்ச்சிகள்:

- ○ இலங்கை வானொலி புகழ் நாதஸ்வர கலைஜோதி பி. எஸ். பிச்சையப்பா குழுவினரின் நாதஸ்வர இசை.
- ○ வேம்படி மகளிர் கல்லூரி மாணவிகளின் வாத்திய இசை.
- ○ செல்வன் ஆனந்தராஜ மாணிக்கத்தின் தாண்டவம்.
- ○ [illegible] வி. கே. நல்லையா அளிக்கும் யாழ். கலாக்ஷேத்திர மாணவிகளின் அலாரிப்பு, குறவன்—குறத்தி, செம்பு நடனம்.
- ○ கொழும்பு திலகவதி கனகசபையின் மாணவியான செல்வி வசந்தகுமாரி முத்துக்குமாரு அளிக்கும் பரதநாட்டியம்.
- ○ டில்லி கலாநிகேதன் வேல் ஆனந்தனின் "நவரசமுத்திரா அபிநயங்கள்".
- ○ [illegible] கிருஷ்ணமூர்த்தி குழுவினரின் மெல்லிசை.
- ○ மானிப்பாய் "கொமடி புரடக்ஷன்ஸாரின்" "கொம்மாளையைச் சொல்லாதே" நகைச்சுவை நாடகம்.

விழா முடிந்ததும் வீடுசெல்ல சகல பகுதிகளுக்கும் இ. போ. ச. பஸ்சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.

யாழ் ஆஸ்பத்திரியில்

ஏற்புத் தடைமருந்து இல்லை

யாழ்ப்பாணம், செவ். கடந்த இரண்டு நாட்களாக யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் ஏற்புத் தடை மருந்து இல்லாதிருக்கின்றது. இதனால் இங்கு செல்லும் நோயாளிகள் பலரும் ஏமாற்றத்துடன் திரும்பிச்செல்லவேண்டியிருக்கின்றது.

நேற்று முன்தினம் ஏற்புத் தடை மருந்து இல்லாததால் சுமார் 30 நோயாளர்கள் சிகிச்சை பெறாது திரும்பிச் சென்றனர். நேற்றும் இதே நிலையில் சுமார் 50க்கும் மேற்பட்ட நோயாளர்கள் சிகிச்சை பெறாது வீடு திரும்பினார்கள்.

புண்களுக்கு மருந்து கட்டும் கட்டிக்கொண்டு வீடு திரும்பும் நோயாளர்களை 'மரமஞ்சள்' அவித்துக் குடிக்குமாறு அங்குள்ள டாக்டர்கள் தெரிவிக்கின்றனராம். (கா. நி.)

பலாத்காரம் செய்தாராம்

வவுனியா, ஞாயிறு நள்ளிரவு மூன்று மணியளவில் தாம் சிறுநீர் கழிக்க, வீட்டுக் கதவைத் திறந்து வெளியே வந்ததும் பலவந்தம் செய்ததாகவும், சம்பவம் பற்றி யாருக்கும் தெரியவந்தால் தம்மைக் கொலைசெய்வதாகப் பயமுறுத்தியதாகவும் 20 வயதுக் குடும்பப் பெண்ணான வாவற்குளத்தைச் சேர்ந்த திருமதி குசுமாவதி, வவுனியாப் பொலிஸ் அதிபருக்கு அளித்த ஒரு வாக்குமூலத்தில் தெரிவித்தார். சம்பவம் நடந்த இரவு தமது கணவர் வயலில் சூடடிக்கச் சென்றிருந்ததாகவும், விடிந்ததும் வயலுக்குச் சென்று சம்பவம் பற்றித் தமது கணவருக்குத் தெரிவித்ததாகவும் அவர் கூறினார்.

சந்தேகத்தின்பேரில் பி. சிறிசேன என்பவரைப் பொலிஸார் கைதுசெய்து விளக்கமறியலில் வைத்துள்ளனர்.

சுழிபுரம்

மீனவருக்கு அடையாள அட்டை

சுழிபுரம், ஞாயிறு சுழிபுரம் பகுதியில் கடல் தொழில் செய்யும் மீனவர்களுக்கு அரசாங்கத்தினால் அடையாள அட்டைகள் நேற்று முன்தினம் வழங்கப்பட்டன. இலுப்பைக் கடவையிலுள்ள மீனவர்களுக்கு வழங்கப்பட்ட அட்டைகளில் ஓட்டை இருக்கின்றது. கழுத்தில் தொங்கவிட வசதியாகவுள்ளது. ஆனால் சுழிபுரம் மீனவர்களுக்கு வழங்கப்பட்ட அட்டைகளில் ஓட்டைகள் வைக்கப்படவில்லை. இதனால் சுழிபுரம் மீனவர்கள் தமது அட்டைகளை எவ்வாறு வைத்திருப்பது என தெரியாமலிருக்கின்றார்கள்.

மரண அறிவித்தல்

உருத்திரபுரம் இந்துக் கல்லூரி முன்னாள் அதிபரும், நீர்வேலி அத்தியார் இந்துக் கல்லூரி அதிபர் S. ஸ்ரீனிவாசன், பரமேஸ்வராக் கல்லூரி உப அதிபர் S. சுப்பிரமணியம், ஸ்ரீமதி அனந்தலக்ஷ்மி பட்டாபிராமன் என்பவர்களின் தந்தையாருமாகிய ஸ்ரீ A. சீதாராமன் அவர்கள் தென்னிந்தியாவில் திருப்பாண்டுக் கொடுமுடியிலுள்ள தமது இல்லத்தில் [illegible] இதை [illegible] நண்பர்களுக்கு அறியத் தருகிறோம். 47

வட்டக்கச்சி இராமநாதபுரம்

ஏழை விவசாயிகளுக்கு தண்ணீர்வசதி

கம்பஹா எம். பி. பிரச்னை எழுப்புவார்

கொழும்பு, திங்கள் பெருங்காணிச் சொந்தக்காரர்க்குரிய நூற்றுக்கணக்கான ஏக்கர்களுக்கு அதிக தண்ணீரைத் திருப்பிவிடுவதால், வட்டக்கச்சி, இராமநாதபுரப் பகுதிகளிலுள்ள ஏழை விவசாயிகளுக்கு ஒன்றரை ஏக்கர் நிலப்பயிர்ச் செய்கைக்கு மாத்திரம் தண்ணீர் வழங்கப்படுகிறது. இதனால் இந்த உழவர்களின் விவசாயம் தோல்வியடைகிறது என்றும், ஏழை உழவர்களுக்கு முதலில் தண்ணீரை வழங்கி அதன்பின்னர், பெருங்காணி உடையோருக்கு வழங்க நடவடிக்கை எடுக்குமாறும் கம்பஹா எம். பி. திரு. எஸ். டி. பண்டாரநாயக்கா நீர்ப்பாசன, மின்சார அமைச்சரை பிரதிநிதிகள் சபையில் கேட்பதற்குமுன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

இத்திட்டத்தில் உள்ளபடி உழவர்களது எல்லா வீடுகளுக்கும் ஓடைகளும், கிணறுகளும் கிடைக்க நடவடிக்கை எடுக்குமாறும், கடந்த புயற்காற்றினால் சேதமடைந்த வீடுகளை விரைவில் திருத்த நடவடிக்கை எடுக்குமாறும் செப்டம்பர் மாதம் 2-ம் திகதி பிரதிநிதிகள் சபையில் திரு. எஸ். டி. பண்டாரநாயகா கேட்பார்.

யாழ். நகரில் முருகநாம பஜனை

யாழ்ப்பாணம், செவ் திருத்தணிகை தேவஸ்தான பக்திப்பஜனைப் பாடகர் கடையநல்லூர், மாசித்தர் மஜீத் வரும் வியாழக்கிழமைமாலை யாழ்ப்பாணம் திறந்தவெளியரங்கில் முருகநாம பஜனை விருந்தளிக்கவிருக்கிறார்.

இளைப்பாறிய மாவட்ட நீதிபதி திரு. செ. தனபாலசிங்கம் தலைமையில் இந்நிகழ்ச்சி நடைபெறும்.

யாழ்ப்பாணம் மில்க்வைற் சோப் ஸ்தாபனத்தார் இதற்கான ஒழுங்குகளை செய்துள்ளனர்.

சுப்ரீம்கோர்ட்டுக்கு பாரம்

வல்வெட்டித்துறை, திங் பருத்தித்துறை விநாயகமுதலியார் ரோட்டைச் சேர்ந்த மு. ஐயாமுத்து ஏ. முருகுப்பிள்ளை ஆகிய இருவரும் அதே இடத்தைச்சேர்ந்த வி. கிருஷ்ணபிள்ளை என்பவரைத் துப்பாக்கியால் சுட்டுக் காயப்படுத்தியதாகவும், வி. கமலநாதன் என்பவரைக் கொலை செய்ய முயற்சித்ததாகவும் பொலிசாரால் குற்றஞ்சாட்டி தொடரப்பட்ட வழக்கு பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு. வே. விக்னராசா முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

விசாரணையின் பின்னர் மாஜிஸ்திரேட் இவ்வழக்கைச் சுப்ரீம் கோர்ட்டுக்கு பாரப்படுத்தினார். வழக்காளி சார்பில் பருத்தித்துறைப் பொலிசாரின் உதவியுடன் புறக்டர் வி. பி. சுந்தரலிங்கம் வழக்கை நடத்தினார்.

இரவு உறங்கியவர் காலையில் மரணம்

யாழ்ப்பாணம், செவ் இரவுச்சாப்பாட்டை முடித்துக்கொண்டு படுக்கைக்குச் சென்ற ஒருவர் காலையில் இறந்துகிடக்கக் காணப்பட்டார். கொய்யாத்தோட்டம் பகுதியில் இச்சம்பவம் நடைபெற்றது.

மரணமான மூன்று பிள்ளைகளின் தந்தையான சின்னத்துரையின் மரணம் சம்பந்தமாக மரணவிசாரணை அதிகாரி திரு. என். இராசநாயகம் விசாரணை நடத்தினார். கரையூர் பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த பொலிஸ் கான்ஸ்டபிள் திரு. எஸ். டி. இரத்தினம் சாட்சியங்களை ஆஜர் செய்திருந்தார்.

இயற்கை மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (கா. நி)

செல்வச்சந்நிதி ஆலய இன்றைய நிகழ்ச்சிகள்

வல்வெட்டித்துறை, செவ்வாய் காலை; 7 மணிக்கு வசந்த மண்டபபூசை. சுவாமி வெள்ளி மயில்வாகனத்தில் வலம் வருதல். இரவு; 6-30க்கு பூசை ஆரம்பம். சுவாமி பச்சைமயில் வாகனத்தில் வெளிவீதி எழுந்தருளல். 8 மணிக்கு திரு சீ. விநாசித்தம்பியின் 'பக்த பிரஹலாதன்' கதாப்பிரசங்கம்.

"கல்வி முறை மாறவேண்டும்"

—உடுவில் எம். பி.

அளவெட்டி, ஞாயிறு "இப்பொழுதும் எமது நாட்டில் குடியேற்ற காலக் கல்விமுறையே நடைமுறையில் இருக்கிறது. இது முற்றாக மாற்றப்பட்டு இக்காலத் தொழில் கல்விமுறை புதிய முறையில் புகுத்தப்பட வேண்டும்."

இவ்வாறு ஏழாலையில் நடைபெற்ற அர்ச். ஞானப்பிரகாசியார் கத்தோலிக்க வாலிபர்சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற விளையாட்டுப்போட்டிக்கு பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட உடுவில் எம். பி. வி. தர்மலிங்கம் கூறினார். அவர் மேலும் பேசுகையில், வாலிபர்கள் இனியும் அரசாங்க உத்தியோகத்தை எதிர்பார்க்காது விவசாயத்தில் ஈடுபடவேண்டும்என்றும் கேட்டுக்கொண்டார். வண. பிதா ஏ. ஆர். பிறவுண் வெற்றியீட்டியவர்களுக்குப்பரிசில்களை வழங்கினார்.

காடையர் தொல்லை

சுழிபுரம். திங். இப்பகுதியில் இரவு நேரத்தில் காடையர்களும், குடிவெறியிலுள்ளவர்களும் பொதுமக்களுக்கும் போக்குவரத்திலீடுபட்டிருப்போருக்கும் கஷ்டங்களைக் கொடுத்துவருகின்றனர்.

[illegible] கிராமத்தைச் சேர்ந்த ஓர் குடும்பத்தினர் மோட்டார்வண்டியில் யாழ்ப்பாணம் சென்றுபடம் பார்த்துவிட்டு வருகையில், அவர்கள் சென்ற மோட்டாரை வழியில் பெரியபுலோ கிராமத்தருகில் ஐவர் கொண்ட ஒரு கோஷ்டி தடுத்து நிறுத்தி பயமுறுத்தி சண்டித்தனம்செய்ய முயன்றனர். சாரதி சாதுரியமாக அவர்களிடமிருந்து தப்பிக்கொண்டு சங்கானைப் பொலிஸ்நிலையத்திற்கு விரைந்து இதுபற்றி முறைப்பாடு செய்ததைத் தொடர்ந்து சங்கானைப் பொலிசார் சம்பவஇடத்திற்கு சென்று சந்தேக நபர்களைக் கைதுசெய்தனர். விசாரணை தொடர்கிறது.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] கோவில் வீதி [illegible] இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 196[illegible] ஆண்டு ஆகஸ்ட் மாதம் 27-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.